## ஆதித்யநாத் ஆட்சியின் அலங்கோலம்!

உத்தரப் பிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ‘மகா கும்பமேளா’ என மாபெரும் மத நிகழ்வை நடத்தி வருகின்றன, அம்மாநில பா.ஜ.க. அரசும், ஆளும் ஒன்றிய அரசும். ஜனவரி 13-ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி 26-ஆம் தேதி வரை 45 நாட்களுக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் கோடிக்கணக்கான மக்கள் கூடுவார்கள் என்கிற எதிர்பார்ப்பு இருந்தும், அம்மாநில பா.ஜ.க. செய்திருக்கும் அரைகுறை ஏற்பாடுகள் பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளன.

முறையான போக்குவரத்து வசதிகள் இல்லை, தங்குமிடம், உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை, கூட்ட நெரிசலை முறைப்படுத்த திட்டம் இல்லை என அடுக்கடுக்கான புகார்கள் எழுந்தவண்ணம் உள்ளன. இதனிடையே பிரதமர் மோடி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உட்பட, நாட்டின் பல கோடி பேர் திரண்டு குளிக்கும் கங்கை நதியின் தரம் குறித்த பேரதிர்ச்சி தரத்தக்க அறிக்கை ஒன்று வெளியாகியிருக்கிறது.

‘கங்கை நதியின் தரம் குளிப்பதற்கான நீரின் தரத்துடன் ஒத்துப்போகவில்லை. கங்கை நீர் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைத்து இடங்களிலும், மல பாக்டீரியாக்கள் எனப்படும் ‘ஃபெக்கல் கோலிஃபார்ம்’ அதிகரித்துள்ளது. மகா கும்பமேளாவில் மக்கள் வழிபாடுகளின்போது அணிந்திருக்கும் ஆடைகள், காலணிகள் உள்ளிட்ட பல பொருட்களை தண்ணீரிலேயே விடுவதாலும், நீரின் தரம் மேலும் மோசமடைந்துள்ளது. அந்தப் பகுதியில் குப்பைகளைச் சேகரிக்கும் பணிகள் நடைபெற்று வந்தாலும், மதச் சடங்குகளால் மாசுபாடு அளவு அதிகரித்துள்ளது’ என்று தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில், ஒன்றிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சமர்ப்பித்துள்ள அறிக்கை தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த அறிக்கை விவரங்கள் பொய்யானவை என்றும், குளிப்பதற்கும், குடிப்பதற்கும் உகந்த நீர் என்றும் கூறுகிறார் அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத். ஒன்றிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவியல் தரவுகளைப் பேசுகிறது. அதை மறுக்கும் ஆதித்யநாத், கோடிக்கணக்கான மக்களின் சுகாதாரத்துடன் விளையாடுகிறார். அவர்களுக்கு உண்மையும், அறிவியலும் கசக்கத்தானே செய்யும்!

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரைச் சந்தித்த தங்கத் தருணம்!



இள.அண்ணாதுரை

9.5.1984 அன்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது, துறையூரில் கழகம் வளர்த்தவரும் முன்னாள் பொதுக்குழு உறுப்பினருமான அண்ணன் இரா.இளமுருகு அவர்கள் மரியாதை நிமித்தமாக, தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்தார். அப்போது, அண்ணன் அன்பில் தர்மலிங்கம், வைகோ, திருச்சி திராவிடப் பண்ணை டி.வி.முத்துகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

**– இள.அண்ணாதுரை,**
**துறையூர் மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளர்,**
**திருச்சி வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பாவேந்தர் போர்க்குரல்!

1928-ஆம் ஆண்டு முதல், பாவேந்தர் பாரதிதாசன் சுயமரியாதை இயக்கக் கவிஞராக பாடல்களை எழுதினார் . பாவேந்தரின் பாடல்கள், திராவிட இயக்க மாணவர்களிடையே மாபெரும் தமிழுணர்ச்சியை ஊட்டி, அதனை இயக்கமாக ஆக்கின. பெரியாரின் கொள்கைகளும், அறிஞர் அண்ணாவின் பேச்சும் எழுத்தும், பாரதிதாசன் கவிதைகளும் சேர்ந்து, திராவிட மாணவர்களிடையே புதிய தெம்பை - இன எழுச்சியை உருவாக்கின. மேடை எங்கும் இலட்சிய கீதமாக பாவேந்தர் பாடல்கள் ஒலிக்கத் தொடங்கின.

## பொய்ப்பெட்டி

50

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”


# காழ்ப்புணர்வில் கதறும் கூட்டம்!

*கடந்த 60 ஆண்டுகளாகத் தமிழர்களுக்கும் தமிழ் இலக்கியங்களுக்கும் எதுவும் செய்யவில்லை என்றும், தமிழ்...தமிழ்.. என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா என்றும், ஆளுநர் ஆர்.என்.ரவி கேட்டுக்கொண்டிருக்கிறாரே?*

அதிகாரப்பூர்வ பதவி நீட்டிப்பு பெறாமலேயே தமிழ்நாட்டில், தமிழர்களின் வரிப்பணத்தில் மாதந்தோறும் பல இலட்ச ரூபாய்களைச் செலவிட்டு சொகுசாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி., தமிழ்நாட்டின் நலனுக்காக எதையாவது பேசியிருக்கிறாரா, செய்திருக்கிறாரா என்று முதலில் அவர் தன் மனசாட்சியிடம் கேட்டுக்கொள்ளட்டும். ‘60 ஆண்டுகளாக...’ என்பது, ஆளுநர் தொடங்கி ஒன்றியத்தில் ஆளுகின்ற கட்சியில் இருக்கின்றவர்களின் வயிற்றெரிச்சலின் வெளிப்பாடு.

பேரறிஞர் அண்ணாவின் ஆட்சி அமைந்த காலத்திலிருந்து ‘திராவிட மாடல் ஆட்சி’ தொடர்கின்ற இந்தக் காலம் வரையிலான காலகட்டத்தின் மீதான காழ்ப்புணர்வில் ஆளுநரும் அவரது ஆர்.எஸ்.எஸ். கூட்டமும் கதறுகின்றன.

கடந்த 60 ஆண்டுகளில்தான் தமிழ் இலக்கியம் என்பது மக்கள் இயக்கமாக மாறியுள்ளது. பாடப்புத்தகங்களில் திருக்குறள் தொடங்கி சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பாசுரங்கள், திருவருட்பா, பாரதியார்-பாரதிதாசன் கவிதைகள் அதன் தொடர்ச்சியான படைப்புகள் அனைத்தும் இடம்பெற்று, மாணவர்களின் இளம் வயதிலேயே மனதில் பதியும்படி பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.




பள்ளிகளில் மாறுவேடப் போட்டி நடத்தப்பட்டால், அதில் 10 பேர் கலந்துகொண்டால் 4 பேராவது பாரதியார் வேடம் போட்டு, ‘அச்சமில்லை.. அச்சமில்லை’ என்ற கவிதையைச் சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

‘சங்கே முழங்கு’ கவிதை தொடங்கி, ‘கொலைவாளினை எடடா’ வரை திரைப்படங்களில் பாரதிதாசன் படைப்புகள் இடம்பெற்று, பாமர ரசிகர்களையும் ஈர்த்து வருகின்றன.

கே.வி.மகாதேவன் இசையமைத்த காலம் தொடங்கி, ஏ.ஆர்.ரஹ்மான் காலம் வரை திரைப்படங்களில் திருக்குறள் இடம்பெறுவது வழக்கமாக உள்ளது. பேருந்துகளில் திருக்குறள் எழுதிய மாநிலம் தமிழ்நாடு. இலக்கியங்களைத் தலைப்புகளாக கொண்ட கருத்தரங்குகள், பட்டிமன்றங்களை நடத்திய பெருமை திராவிட இயக்கத்திற்கு உண்டு. கவியரங்கங்களுக்குக் கட்டணம் செலுத்தி, மக்கள் வரக்கூடிய அளவிற்கு இலக்கிய ஆர்வத்தை உருவாக்கியதும் திராவிட இயக்கம்தான்.

தமிழ் இலக்கியம் சார்ந்த பல்கலைக்கழக அளவிலான ஆய்வுகள் நூற்றுக்கணக்கில் நடைபெற்றுள்ளன. சர்வதேச அளவிலான கருத்தரங்குகள் பல நடைபெற்று வருகின்றன. கடல் கடந்த நாடுகளிலும் தமிழ் இலக்கியங்கள் பரவிக் கொண்டிருக்கின்றன. இவையெல்லாவற்றையும் விட, வேறெந்த மாநிலத்திற்கும், வேறு எந்த மொழிக்கும் அமையாத சிறப்பு என்னவென்றால், திராவிட இயக்கத்தின் தலைவர்களே படைப்பாளர்களாக இருந்து, தமிழ் இலக்கியங்களைப் படைத்திருப்பதுதான். முத்தமிழறிஞர் கலைஞரின் ‘குறளோவியம்’, ‘சங்கத்தமிழ்’, ‘தொல்காப்பிய பூங்கா’ ஆகியவை அதற்கான அழுத்தமான சான்றுகள்.

...வினா தொடரும்.

# முதலில் இந்தி வரும்! பிறகு சமஸ்கிருதம் வரும்!

**ர.பிரகாசு**

உத்தரப் பிரதேசத்தில், இந்திக்கு அடுத்து உருது பேசும் மக்கள் அதிகம் இருக்கிறார்கள். ஆனால், பாடத்திட்டங்கள், அரசுத்துறைகளில் இருந்து உருது வார்த்தைகளைத் தேடித்தேடி நீக்குகிறது, அம்மாநில பா.ஜ.க. அரசு. இதே தூய்மைவாதத்தை போஜ்புரியில் எதிர்பார்த்தால், அது தேசத்துரோகம் ஆகிவிடும்! பள்ளிகளில் உருதுவில் இறை வணக்கம் செய்ய அனுமதி மறுக்கிறார்கள். உருது ஆசிரியர்கள் பணி நியமனங்களை அலசி ஆராய்ந்து, அவர்களின் கோப்புகளில் எங்கேனும் சிறுபிழை இருக்காதா என தேடித்தேடி பணிநீக்கம் செய்கின்றனர்.

குஜராத்தில் அம்மாநில மொழியான ‘குஜராத்தி’க்கே பரிதாப இடம்தான் மிஞ்சியிருக்கிறது. அதனால்தான் 2023-24 நிதியாண்டில் 1-8ஆம் வகுப்பு வரை குஜராத்தியைக் கட்டாயமாக்கும் தீர்மானம், அம்மாநில சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்டது. மூன்றாவது மொழியாக தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மற்ற மொழிகளைக் கற்பிக்கலாம் என பெயரளவில் சொல்லியிருக்கிறார்களே தவிர, ஒரு மாநிலத்தில் கூட விருப்பப் பாடமாக தென்மாநில மொழியை மாணவர்கள் தேர்ந்தெடுத்ததாகவோ அல்லது ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவோ தகவல் இல்லை. குறிப்பாக, இந்தி மொழியைக் கற்பிக்கவும், இந்தி ஆசிரியர்களை நியமிக்கவும் மட்டுமே நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். பிறமொழி ஆசிரியர் பணிக்கு நிதி ஒதுக்கப்படவே இல்லை.

ஏன், பல வட இந்திய மாநிலங்களில் ஆங்கில ஆசிரியர்கள் நியமனமே அரைகுறையாகத்தான் உள்ளது.

மாறாக, இந்தியைத் திணித்து, வட இந்திய மாநிலங்களில் மாநில அல்லது உள்ளூர் மொழிகளின் நிலையைக் கவலைக்கிடமாக்கியதுதான் நடந்திருக்கிறது. இப்போது இந்தி மட்டுமே அங்கும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்ட பிறகு, அடுத்து ‘சங் பரிவார்’களின் இலக்கான சமஸ்கிருதத்தை நோக்கி, வேகமாக நகரத் தொடங்கிவிட்டார்கள்.

ராஜஸ்தானில் உருதுவை நீக்கிவிட்டு, மூன்றாவது மொழியாக சமஸ்கிருதத்தைத் திணிக்க அம்மாநில பள்ளிக்கல்வித்துறை, சமீபத்தில் முன்மொழிவு வழங்கியிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் ஏற்கெனவே பல தொடக்கப் பள்ளிகளில் சமஸ்கிருதம் கட்டாயப் பாடமாக்கப்பட்டுவிட்டது. உத்தரகாண்டில் இரண்டாவது அலுவல் மொழியே சமஸ்கிருதம்தான்.

இந்தியா முழுவதும் சமஸ்கிருதம் படிக்கத் தெரிந்தவர்கள் 24 ஆயிரத்து 821 பேர்தான் என்கிறது புள்ளிவிவரம். ஆனால், மத்தியப் பிரதேசத்தில் நெடுஞ்சாலை வழிகாட்டிப் பலகைகள் சமஸ்கிருதத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இமாச்சல், கர்நாடகா, குஜராத், பீகார் மாநிலங்களில் பள்ளி - கல்லூரிகளில் சமஸ்கிருத விழாக்கள், கலாச்சார நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. மகாராஷ்டிராவில் சமஸ்கிருத வெளியீடுகள், கருத்தரங்குகள், மாநாடுகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன.

டெல்லியில், சமஸ்கிருதம் கற்றுக்கொள்ள உதவித்தொகை தரப்படுகிறது. இப்படி, இந்தியில் ஊறிப்போன மாநிலங்கள் எல்லாம் அடுத்து, சமஸ்கிருதத்தை ஊறுகாய் போல தொடத் தொடங்கிவிட்டன.


இன்னும் நாற்பது, ஐம்பது ஆண்டுகளில் அங்கே இந்திக்கு அடுத்த மொழியாக சமஸ்கிருதம் இருக்க வேண்டுமென்பது, அவர்களின் இலக்கு. அதேவேளையில், இன்னும் இந்தியைத் திணிக்க முடியாத சில தென்மாநிலங்களுக்காகத்தான் மும்மொழியைத் தூக்கி வருகிறார்கள். இங்கும் திணித்துவிட்டால் அடுத்து சமஸ்கிருதத்தை எட்டிப்பார்க்க வைப்பார்கள். அதன்பிறகு ‘ஒரே நாடு ஒரே மொழி’ என்ற முழக்கத்தைக் கையிலெடுத்துவிடுவார்கள். அதற்கு இன்னும் ஒரு நூற்றாண்டுகூட ஆகலாம்! ஆனால், அதை நோக்கியதுதான் அவர்களின் நகர்வு! அதற்கு ஒருபோதும் இடம் தராது ‘தமிழ்’நாடு.



## திராவிடத்தால் வாழ்கிறோம்

756

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131